தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ. 5/- மலர் 12 இதழ் 06 அக்டோபர் 2010 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்கள்
உற்பத்தி செய்யும் பொருட்களின்

நவராத்திரி

விற்பனைக் கண்காட்சி

"2010–11 ஆம் ஆண்டில் மாநில அளவில் இரண்டு, மாவட்ட அளவில் 60 மற்றும் வட்டார அளவில் 130 விற்பனைக் கண்காட்சிகள் நடத்தத் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது."

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

சுய உதவிக் குழுக்கள் தங்களது பொருட்களை சந்தையில் விற்பனை செய்ய உதவிடும் வகையில், அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் நல்ல இணக்கத்தையும், கண்காணிப்பையும் ஏற்படுத்த தமிழ்நாடு சுய உதவிக் குழுக்கள் நலச் சங்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த ரூ. 15.33 கோடி மதிப்பீட்டில் ஒரு பெரிய நிரந்தரமான வணிக வளாகம் சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் அருகில் கட்டப்பட்டுள்ளது. அதேபோல் 29 மாவட்டத் தலைநகரங்களிலும் பூமாலை வணிக வளாகங்கள் 8.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. ஊரகப் பகுதிகளில் விற்பனையை மேம்படுத்தும் வகையில் ரூ. 13.50 கோடி மதிப்பீட்டில் 90 கிராமச் சந்தைகள் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மூன்று வீதம்) கட்டப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் விற்பனை மற்றும் கண்காட்சி அட்டவணை ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கு கொள்ளும் விற்பனைப் பொருட்காட்சி ஆண்டுதோறும் வெவ்வேறு மாநிலங்களில் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு இக்கண்காட்சி கடந்த மாதம் கேரள மாநிலத்தில் நடைபெற்றது. இதில் நமது மாநிலத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் பங்கு கொண்டு, கேரள அரசின் பாராட்டுக் கேடயத்தை பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மக்களிடையே பலத்த வரவேற்பினைப் பெற்றுள்ளதால் சுய உதவிக் குழுக்கள் மேலும் நவீன முறையில் பயிற்சிகள் பெற்று தரமான பொருட்களை தயாரித்து விற்பனை செய்து பொருளீட்டி வாழ்வில் வளம் பெற வாழ்த்துகிறேன்!

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

வடநெம்மேலி ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பு » 4

குழந்தைக்கு ஒரு தாய் முக்கியத்துவம் அளிப்பது போல் சுனாமியால் பாதிப்புக்குள்ளான இப்பகுதியில் மட்டும் இத்திட்டம் செயல்படுவது தங்கள் வாழ்க்கையில் பொருளாதார ரீதியாகவும், தொழில் அளவிலும் வெற்றி பெறத்தான் என்பதை கூட்டமைப்பின் செயல்பாடுகள் உறுதி செய்கிறது.

ஆன்-லைனில் வேலைவாய்ப்புக்கு பதிவு » 10

இதன் மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் வருவதால் ஏற்படும் போக்குவரத்துச் செலவு மற்றும் இதர செலவுகள் தவிர்க்கப்படும். இணையதளத்தில் 65 லட்சம் வேலைவாய்ப்பக பதிவுதாரர்களின் விவரங்கள் அளிக்கப்படும். இதை பார்வையிட்டு தங்களது பதிவு விவரங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

22 **நலமளிக்கும் நடைப்பயிற்சி**

வெற்றியை நோக்கி ஒரு பயணம்

12

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு **விதவை மறுமண நிதியுதவித் திட்டம்**

26

24 **வளர்க வணிகம்**

இணைவோம், உழைப்போம், வளர்வோம்
முனைவோம், முயல்வோம், உயர்வோம்

- மாண்புமிகு. துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 12 இதழ் 06 அக்டோபர் 2010 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
முனைவர். ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

ஆசிரியர் குழு
திரு. கு. இராமமூர்த்தி
கூடுதல் இயக்குநர்

திருமதி. க. ராஜம்
கூடுதல் இயக்குநர்

திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

திருமதி. நா. வேம்பு
நிதி ஆலோசகர்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்

உதவி ஒருங்கிணைப்பாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751
www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

அன்புள்ள வாசகர்களுக்கு,

"வாய்மையே வெல்லும்" "வன்முறை பிரச்சனைக்குத் தீர்வாகாது" நீதி கேட்க அறவழிப் போராட்டம்" "சுய உதவி மிகவும் அவசியம்" "மது அருந்துவது உடல் நலக் கேடு", என பல்வேறு ஒழுக்க நெறிமுறைகளை தனி மனிதனுக்கும், சமுதாயத்துக்கும் கூறிய, நமது நாட்டின் விடுதலைக்கு தலைமை ஏற்ற, நம் தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த மாதம்தான் அக்டோபர் மாதம்.

இந்திய நாட்டின் இதயம் கிராமங்கள்தான். கிராமங்களில் குடிசைத் தொழில்களும், கைத்தொழில்களும் வளர்க்கப்பட வேண்டும். கிராம அரசாங்கம் உருவாக்கப்பட்டு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என கிராம வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவராக காந்தியடிகள் இருந்தார்.

அவர் முன்வைத்த கிராமப் பொருளாதாரமும், அடிப்படை கல்விக் கொள்கையும், தொலைநோக்கு பார்வைகளாகும். எளிமையான அதே நேரத்தில் அதிக வேலை வாய்ப்பைக் கொடுக்கின்ற, சுற்று சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, உடல் நலனுக்கு ஏற்ற குடிசைத் தொழில்களை உருவாக்க வேண்டுமென கனவு கண்டார்.

அவர் கண்ட கனவை இன்று செயல்படுத்திக் கொண்டிருப்பவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள்தான் என்றால் அது மிகையாகாது.

ஊராட்சி மன்ற தேர்தலில் பங்கெடுப்பது, கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு முடிவுகள் எடுப்பது, கிராம வளர்ச்சி பணிகளுக்கு திட்டமிடுவது, அரசுத் திட்டங்கள் மக்களை சென்றடைவதற்கு உதவுவது, கைத்தொழில்களை ஏற்படுத்தி பலருக்கு வேலை வாய்ப்பை கொடுப்பது போன்ற செயல்பாடுகள் மூலம் கிராம பொருளாதாரம் வளர்ச்சியடையவும், பெண் கல்வி உயரவும், கிராமங்களில் நல்லிணக்கம் வளரவும் உதவிகரமாக இருப்பது பாராட்டத்தக்கது.

காந்தியடிகள் விரும்பிய உலகம் அமைதியான உலகம். ஆனால் அமைதியை விரும்பிய அவருக்கு வன்முறையிலான மரணம் நிகழ்ந்தது மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு, உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அனைத்து மக்களும் வேலைவாய்ப்பினைப் பெற்று, கடுமையான உடல் உழைப்பின் மூலம் நலமான வாழ்வினை அடைந்து, எளிமையான முறையில் ஒவ்வொருவரும் வாழ்க்கையை வாழ்ந்து காட்டினால் அமைதியான உலகத்தை உருவாக்கலாம் என்பதுதான் அவர் கண்ட கனவு.

நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தர அயராது உழைத்த தேசத் தந்தையின் கனவை நனவாக்குவோம்!

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

எதிர்பார்க்கிறோம்!

கடந்த ஐந்து மாதங்களாக முற்றம் இதழினை படித்து வருகின்றோம். அதில் உள்ள செய்திகளையும், புகைப்படங்களையும் பார்க்கின்ற போது, எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. நாங்களும் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்குள் ஏற்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் முற்றம் பத்திரிக்கை எப்பொழுது வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு,
திருமதி. கே. கலா, ஊக்குநர்,
பராசக்தி மகளிர் மன்றம்,
வீரபாண்டி, விழுப்புரம் மாவட்டம்.



www.tamilnaduwomen.org/murtram

முற்றத்திற்கு நன்றி!

ஆகஸ்ட் மாத முற்றம் இதழின் அட்டைப்படம் மிகவும் ரசிக்கும்படி இருந்தது. வெளி உலகமே தெரியாத நம் மகளிர் எந்தெந்த துறைகளில் சாதித்திருக்கிறார்கள் என்று கூறுவதுபோல் இருந்தது. அட்டைப் படங்களை அழகாகத் தேர்ந்தெடுத்தும், மகளிர் சுய உதவிக் குழுக்களும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் வண்ணம் செய்திகளையும் வெளியிடும் முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புடன்,
திருமதி. ஏ. பிரேமா,
கலைமகள் மகளிர் சுய உதவிக் குழு,
காங்கேயநல்லூர், வேலூர் மாவட்டம்.

வரவேற்கிறோம்!

தமிழக அரசின் நலத்திட்டங்களைப் பற்றியும், பிற சலுகைகள், உரிய தகுதிகள், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் பற்றிய விவரங்களையும் அழகாகவும், தெளிவாகவும் கூறி இருப்பதைப் பார்த்து மிகவும் பெருமை அடைகிறோம்.

இதுபோன்ற நலத் திட்டங்களை தொடர்ந்து வெளியிட கோருகிறோம். முற்றம் இதழே நீ மேலும் மேலும் வாழ்க! வளர்க! என்று எங்கள் குழுவின் அன்பான வாழ்த்துகள்.

இப்படிக்கு,
திருமதி. சித்ரா சம்பத்குமார்,
பவானி மகளிர் சுய உதவிக் குழு,
மாதர்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்

“மகளிர் முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் செய்திகள் பலவற்றை தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் நன்றி.”

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com ■ wdcmutram@gmail.com

வடநெம்மேலி ஊராட்சி அளவிலான

மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பு

IFAD-PTSLP அலுவலகத்தில் நிறுவன வளர்ச்சி அலுவலர் வட நெம்மேலி கிராமத் திற்கு வருகை புரிந்து குழுக்களிடையே அறிமுகக் கூட்டம் நடத்தி பின்பு குடியிருப்பு மன்றம் ஆரம்பிப்பதற்கு தேவையான குழுக்கள் 20 இருக்க வேண்டும் என்றார்கள். ஆனால் 9 குழுக்கள் மட்டும் இருந்தன.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், வட நெம்மேலி கிராமத்தில் 9 சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வந்தன. எந்தவித பயனும் இல்லாமல் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதுமாக இருந்து வந்தன. எத்தனையோ நிறுவனங்கள் வந்து போயின. ஆனால் யாரும் இதுவரை எந்த உதவியும் செய்யவில்லை. ஆனால், IFAD-PTSLP என்ற திட்டம் அறிமுகம் ஆனபோது கூட, இத்திட்டத்தின் மூலம் இவர்கள் வந்து என்ன செய்யப் போகிறார்கள் என மகளிர் சுய உதவிக் குழுக்கள் நினைத்தன. ஆனால் குழுக்கள் 'அன்று நினைத்தது வேறு. இன்று நடப்பது வேறு'.

அந்த கிராமத்தில் IFAD மூலம் முதன் முதலாக அனைத்து குழுக்களையும் ஒன்று சேர்த்து நேரிடையாக கூட்டமைப்பு தேர்தல் நடத்த வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது. இதன்படி தேர்தல் நடத்தப்பட்டு கூட்டமைப்பின் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். 9 குழுக்கள் மட்டும் இருந்த வடநெம்மேலி கிராமத்தில் IFAD-PTSLP திட்டத்தின் சீரிய முயற்சியால் தற்போது 16 குழுக்கள் அமைக்கப்பட்டு அவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இக்கூட்டமைப்பானது IFAD-PTSLP திட்டத்தின் நேரடிப் பார்வையில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. PTSLP திட்டத்தின் கீழ் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு காப்பீட்டு வசதிகள், துயர் துடைப்பு நிதி, பெருங்கடன், புதிய முயற்சிக்கான மூலதன நிதி போன்றவைகள் ஒதுக்கப்படுவது குறித்து இக்கூட்டமைப்பின் குழுக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளன. சுனாமியால் பாதிப்புக்குள்ளான இப்பகுதியில் மட்டும் இத்திட்டம் செயல்படுவது தங்கள் வாழ்க்கையில் பொருளாதார ரீதியாகவும், தொழில் அளவிலும் வெற்றி பெறத்தான் என்பதை கூட்டமைப்பின் செயல்பாடுகள் உறுதி செய்கிறது.

கிடைத்த இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்த அவ்வப்போது வழிகாட்டுதல் வகுப்புகளும் ஆலோசனைகளும் இக்கூட்டமைப்பிற்கு கிடைத்த வண்ணமே உள்ளன. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பார்கள். இவர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள். வென்று காட்டுவார்கள். ■

திருநெல்வேலி மாவட்டம்

வி. பி. எஸ். மகளிர் சுய உதவிக் குழு

நெல்லை மாவட்டம், வீரவநல்லூரில் கடந்த 2002ம் ஆண்டு முதல் வி.பி.எஸ். மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

அழகிய கலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பயிற்சியை பெற்றுள்ள இக்குழுவினர், சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடன் ஆகியவைகளைப் பெற்று, கோரைப் பாய், கல்யாணப் பட்டு பாய், பாயினால் செய்யப்பட்ட அழகிய பொருட்கள், கைப்பைகள், காய் கறி கூடைகள், பெட்டிகள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பல்வேறு பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருவாய் ஈட்டுகின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

மகளிர் திட்டம் மூலம் நடத்தப்பட்டு வரும் பல்வேறு விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருவாய் ஈட்டி வருகின்றனர். திருநெல்வேலி மகளிர் திட்டம் மூலம் நடைபெற்ற கண்காட்சியில் சிறப்பாக பங்கு பெற்றமைக்கான முதல் பரிசை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களிடம் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு சென்னையில் இந்தியன் வங்கி சார்பாக நடைபெற்ற கண்காட்சியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்றுள்ளனர்.

தங்களது குழுவில் இல்லாத பெண்களுக்கும் பல்வேறு கலைப்பொருட்களை உற்பத்தி செய்யும் கலையைக் கற்றுக் கொடுத்து வருகின்றனர். தற்போது இக்குழுவின் மூலம் சுமார் 50 பெண்கள் வேலைவாய்ப்பு பெற்று வருவாய் ஈட்டி வருகின்றனர்.

மேலும் தங்கள் பகுதியின் வளர்ச்சிக்காகவும், பெண்களின் ஆரோக்கியத்திற்காகவும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துவது, ஆதரவற்றோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு பல்வேறு உதவிகளை செய்வது, சுற்றுப்புறச் சூழலைக் காப்பது போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். ■

இக்குழுவினர் தயாரித்த தரமான, விலை குறைந்த, சுற்றுச்சூழலுக்கு ஊறு விளைவிக்காத பாய் பொருட்கள் மற்றும் பிற தயாரிப்புகளை மக்கள் விரும்பி வாங்கத் துவங்கினர். தற்போது நல்ல வருவாய் ஈட்டி வருவதுடன், வங்கியில் பெற்ற கடன் தொகையையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்கள்

நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆண்டுதோறும் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வணிக வளாகம் 'அன்னை தெரசா மகளிர் வளாகம்' என்று பெயர் சூட்டப்பட்டு நவம்பர் 1ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் தொழிற்திறன், உற்பத்திப் பொருட்களின் வகைகள் மற்றும் அவர்தம் ஆற்றலை வெளியுலகிற்கு உணர்த்திடவும், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தி உதவிட ஒரு வாய்ப்பளிக்கவும் இந்த விற்பனைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இவ்வாண்டு இக்கண்காட்சி சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ கற்பகாம்பாள் திருமண மண்டபம், வேலூர் லட்சுமி அம்மாள் திருமண மண்டபம் மற்றும் சென்னை அண்ணா நகர் மேற்கில் அமைந்துள்ள தந்தை பெரியார் சமுதாயக் கூடம் ஆகிய இடங்களில் 08.10.2010 முதல் 31.10.2010 வரை நடைபெற்றது.

மயிலாப்பூர் ஸ்ரீ கற்பகாம்பாள் திருமண மண்டபம் மற்றும் சென்னை அண்ணாநகர் மேற்கில் அமைந்துள்ள தந்தை பெரியார் சமுதாயக் கூடம் ஆகியவற்றில் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை 08.10.10 மற்றும் 09.10.10 ஆகிய நாட்களில் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்குகளைப் பார்வையிட்டு

சிறப்பித்தார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, “மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தமிழக அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 73.60 இலட்சம் மகளிரை உறுப்பினராகக் கொண்டு 4.74 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இந்த சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்காக மாவட்ட அளவில் 29 வணிக வளாகங்கள், 22 கூடுதல் வணிக வளாகங்கள் மற்றும் 256 கிராம அங்காடி வளாகங்களும் கட்டப்பட்டு இக்கடைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் நிரந்தரமாக விற்பனை செய்யப்படுகிறது, தற்போது 90 கிராம அங்காடிகள் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்ய சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் வணிக வளாகம் சுமார் 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட முடிவு செய்யப்பட்டு, இப்பணிகள் தற்போது முடிக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திறக்கப்படவுள்ளது.

தலைவர் கலைஞர் அவர்களிடம் நாங்கள் இந்த வளாகத்தை திறக்க தேதி கேட்ட போது, தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு நாம் அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடவுள்ளோம். எனவே, இந்த வளாகத்திற்கு ‘அன்னை தெரசா மகளிர் வளாகம்’ என்று பெயர் சூட்டுங்கள் எனத் தெரிவித்தார்கள். இதன்படி, வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வணிக வளாகம் ‘அன்னை தெரசா மகளிர் வளாகம்’ என்று பெயர் சூட்டப்பட்டு நவம்பர் 1ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையினை அதிகப்படுத்தவும், மக்களிடையே இப்பொருட் களை பிரபலப்படுத்தவும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சிறப்பு விற்பனைக் கண்காட்சிகள் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மாநில அளவில் 2 விற்பனை கண்காட்சிகளும், மாவட்ட அளவில் 62 திட்டமிட்ட கண்காட்சிகளும், இதுதவிர 134 விருப்பக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. மாவட்ட அளவில் பொதுமக்கள் கூடும் நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மேலும் பிற மாநிலங்களில் நடைபெறும் நாடு தழுவிய சாராஸ் விற்பனை கண்காட்சிகளிலும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு சென்னையில் மாநில அளவில் நடைபெற்ற 2 கண்காட்சிகளில் ரூ. 2.99 கோடி மதிப்பிலான பொருட்களும், மாநிலம் முழுவதும் நடைபெற்ற பல்வேறு கண்காட்சிகள் மூலம்

ஆயத்த ஆடை வடிவமைப்பு பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் வட்டாரத்தில் மகளிர் திட்டப் பணிகளை கள ஆய்வு செய்தார்.

வானகரம் ஊராட்சியில் நடைபெறும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான தொழில் முனைவு மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ் நடைபெறும் ஆயத்த ஆடை வடிவமைப்பு பயிற்சியில் 28 மகளிர் பயிற்சி பெறுவதையும், இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 40 இளைஞர்களுக்கு ஆவடி நிறுவனத்தில் வழங்கப்பட்டு வரும் கணினிப் பயிற்சியையும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

காரம்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டமைப்பின் செயல்பாட்டை ஆய்வு செய்தார். ஊராட்சி அளவில் மட்டும் இல்லாமல் வட்டார அளவிலான கூட்டமைப்பை உருவாக்கிடவும் அறிவுரை வழங்கினார்.

சுய உதவிக் குழுக்களில் இணையாது விடுபட்ட வறுமை நிலையில் உள்ள மகளிரை இணைத்து புதிய குழுக்களை உருவாக்கிடவும், திருவள்ளூர் மாவட்டத்தில் நவம்பர் 2010க்குள் 2000 புதிய குழுக்களை விரைந்து உருவாக்கி அமைத்திடவும், கடந்த ஆண்டு மற்றும் நடப்பு ஆண்டு அமைக்கப்பட்ட குழுக்களில் தகுதி வாய்ந்த குழுக்களை தர மதிப்பீடு செய்து, சுழல் நிதி விடுவிக்கவும் அறிவுரை வழங்கினார்கள்.

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் எஸ்.பி. திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியினைப் பொதுமக்கள் பெருமளவில் பார்வையிடவும், குறைந்த விலையில் தரமான பொருட்களை வாங்கி பயனடையுமாறும் கேட்டுக் கொண்டார்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களின் தரம், உற்பத்தி செய்யப்படும் விதம், விற்பனை வாய்ப்புகள் போன்ற விபரங்களை கேட்டறிந்தார்.

ரூ. 17.52 கோடி மதிப்பிலான பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் ரூ. 25.00 கோடி மதிப்பிலான மகளிர் சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்வதற்கான சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் உற்பத்தித் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் அவற்றின் மதிப்பு கூட்டும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. மேலும் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நடப்பு ஆண்டில் 70,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 70.00 கோடி சுழல் நிதி மானியத்துடன் கூடிய ரூ. 420.00 கோடி கடன் உதவியும் மற்றும் 8,813 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 90.00 கோடி மானியத்துடன் கூடிய ரூ. 350 கோடி கடன் உதவியும் வழங்கப்படும். மேலும் இவ்வாண்டு வங்கிகள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 3000 கோடி கடன் தொகை பெற்றுத் தரப்படும்.

ரூ. 70.00 கோடி சுழல் நிதி மானியத்துடன் கூடிய ரூ. 420.00 கோடி கடன் உதவியும் மற்றும் 8,813 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 90.00 கோடி மானியத்துடன் கூடிய ரூ. 350 கோடி கடன் உதவியும் வழங்கப்படும்.

மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தில் நிலைத்த தன்மையை கொண்டு வரும் வகையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகின்றன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வங்கிகளிடமிருந்து ரூ. 60.00 இலட்சம் வரை பெருங்கடன் பெற்றுத் தரப்படுகிறது. இத்தகைய நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் இந்த உற்பத்திப் பொருட்கள் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு மகளிர் மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது" என மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் துணை முதலமைச்சர் அவர்கள் கண்காட்சியினை துவக்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த விற்பனை அரங்குகளை பார்வையிட்டதுடன், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களின் தரம், உற்பத்தி செய்யப்படும் விதம், விற்பனை வாய்ப்புகள் போன்ற விபரங்களை கேட்டறிந்தார்.

இவ்விற்பனைக் கண்காட்சியில் பொம்மை வகைகள், கலைப்பொருட்கள், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அனைத்து வகையான ஆயத்த ஆடை வகைகள், பட்டுப் புடவைகள், கம்பளி ஆடைகள், எம்ப்ராய்டரி புடவைகள், பெண்களுக்குத் தேவையான பேன்சி ஆபரணங்கள், ஐம்பொன் ஆபரணங்கள், வளையல் வகைகள், வீட்டு அலங்காரத்திற்கு தேவையான கைவினைப் பொருட்கள், மரச் சிற்பங்கள், காகிதப் பொருட்கள், தினசரி பயன்பாட்டிற்கான உணவுப் பொருட்கள், மூலிகை மருந்து பொருட்கள், தேன் வகைகள், பனை ஓலை, பாக்கு மட்டை பொருட்கள் மற்றும் இதுபோன்ற ஏராளமான சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ரூ. 60.00 இலட்சம் வரை பெருங்கடன் பெற்றுத் தரப்படுகிறது. இத்தகைய நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர்.

அண்ணா நூற்றாண்டு நூலகம் திறப்பு விழா

சென்னை கோட்டூர்புரத்தில் 8 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 15.09.2010 அன்று திறந்து வைத்தார்கள். தரைத்தளத்துடன் 8 மாடிகள் கொண்ட இந்த கட்டடத்திற்கு பசுமைக் கட்டடத்திற்கான தங்க தரச் சான்றும் கிடைத்துள்ளது.

இந்த நூலகத்தில் 24,075 தலைப்புகளில் 92,440 தமிழ் நூல்களும், 3.50 இலட்சம் தலைப்புகளில் உலகின் முன்னணி பதிப்பாளர்களிடம் இருந்து ஆங்கில நூல்களும், 50,000 மின் நூல்கள், 11,000 மின்னிதழ்கள் இடம் பெற்றுள்ளன. வரவேற்பு, உறுப்பினர் சேர்க்கை மற்றும் அடையாள அட்டை வழங்கல், தகவல் மையம், கணினி மயமாக்கப்பட்ட நூற்பட்டியல், மாற்றுத் திறனாளிகளுக்கான நூல்கள் பிரிவு, பிரெய்லி நூல்கள் மற்றும் படியெடுக்கும் பிரிவு ஆகியவை தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் 15,000 சதுரஅடி இடத்தில் குழந்தைகளுக்கான நூல்கள் இடம் பெற்றுள்ளன. இதன் மையப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை மரத்தின் அடிப்பகுதியில் குழந்தைகள் அமர்ந்த படிக்கலாம். இரண்டாம் தளம் முழுவதும் தமிழ் நூல்களும், செம்மொழி இலக்கிய நூல்கள், நாட்டுடமை ஆக்கப்பட்ட நூல்கள், நன்கொடை நூல்கள், அரிய நூல்களின் தொகுப்பு, கணினி மயமாக்கப்பட்ட நூல்கள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. முதல் தளம் தொடங்கி 5ஆம் தளம் வரை ஆங்கில பொது மற்றும் பாட நூல்களும், ஆறு முதல் எட்டாம் தளம் வரை கணினிப் பிரிவு, நிர்வாகப் பிரிவு மற்றும் இயந்திரப் பிரிவுகள் இயங்கத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த நூலகத்தில் 1250 பேர் அமர்ந்து படிக்க முடியும். 400 கார்கள், 100 இருசக்கர வாகனங்கள் நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. 50,000 சதுர அடியில் பேரரங்கம், 800 பேர் அமரும் வசதி கொண்ட திறந்தவெளி அரங்கம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளது

ஆன்-லைனில் வேலைவாய்ப்புக்கு பதிவு

தமிழகத்தில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங் களையும் இணையதளம் மூலம் ஒருங்கிணைத்து, வேலைவாய்ப்பு பதிவுகளை ஆன்-லைன் மூலம் செய்யும் வசதியையும், ‘எம்பவர்’ என்ற புதிய இணையதளத்தையும் மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

வேலைவாய்ப்பகத்தின் சேவைகளை ஒளிவு மறைவற்ற வகையில் அளிக்க, அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் இணையதளம் மூலம் ஒருங்கிணைக்க, தமிழக அரசு 5.02 கோடி ரூபாயை ஒதுக்கியது. இப்பணிகள், ‘எல்காட்’ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதன் மூலம், ‘எம்ஜீஸ்’ நிறுவனத்திடம் புதிய மென்பொருள் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டது.

இப்பணி, ‘புராஜக்ட் எம்பவர்’ என பெயரிடப்பட்டு, வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கான புதிய மென்பொருளும், இணையதளமும் உருவாக்கப்பட்டுள்ளது. www.tnvelaivaaippu.gov.in என்ற இந்த புதிய இணையதளத்தை, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சமீபத்தில் துவக்கி வைத்தார்.

இந்தப் புதிய இணையதளத்தின் மூலம் முதற்கட்டமாக பதிவுதாரர்கள் அனைவரும் ஆன்-லைன் மூலம் நேரடியாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இனி புதிதாக பதிவு செய்ய வேலைவாய்ப்பு அலுவலகங்களை நேரில் அணுகத் தேவையில்லை. மேலும், பதிவு மட்டுமன்றி ஆன்-லைன் மூலம் தங்களது பதிவை புதுப்பித்துக் கொள்ளலாம்.

இதன் மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில் வருவதால் ஏற்படும் போக்குவரத்துச் செலவு மற்றும் இதர செலவுகள் தவிர்க்கப்படும். இணையதளத்தில் 65 லட்சம் வேலைவாய்ப்பக பதிவுதாரர்களின் விவரங்கள் அளிக்கப்படும். இதை பார்வையிட்டு தங்களது பதிவு விவரங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

இணையதளத்தில் பதிவுதாரர்களின் விவரங்களில் மாறுபாடு இருந்தால், உரிய சான்றிதழுடன் வேலைவாய்ப்பக அலுவலகத்தை நேரில் அணுகி சரி செய்து கொள்ளலாம். இவ்வாறு பதிவு விவரங்களை சரி பார்ப்பதற்காக, பதிவுதாரர்களுக்கு 2010 செப்டம்பர் 15ஆம் தேதி முதல் 2011 ஜனவரி 14ம் தேதி வரை கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

சுய உதவிக் குழு கூட்டமைப்புகள்

- முனைவர். ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

வாசகர்களே,

சென்ற இதழில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் அடைந்துள்ள வளர்ச்சி மற்றும் பெற்றுள்ள வெற்றிகள் குறித்தும், இதற்கு காரணமானவர்கள் குறித்தும் அறிந்து கொண்டோம். இனி வரும் இதழ்களில் மகளிர் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகள் குறித்தும், அவைகளின் செயல்பாடுகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை குறித்தும் தொடர்ந்து காணலாம்.

இந்த இயக்கம் பெற்றுள்ள அதீத வளர்ச்சி மனதிற்கு இதமாக உள்ளது. மகளிர் வீடுகளில் முடக்கி வைக்கப்பட்டிருந்த நிலை வெகுவாக மாறி விட்டது. பல்வேறு பயிற்சிகள் மூலம் உலக நடப்புகளை அறிந்து கொள்ள முடிந்தது. பெரும்பாலான கிராம சபைகள் பெண்கள் வசமாகி விட்டன. உயர் நிலையில் இருப்பவர்களோடு சகஜமாக பழகும் நிலையும் ஏற்பட்டு விட்டது. முன் முயற்சிகளுக்கு மகளிரை மேற்கோள் காட்டும் நிலையும் தோன்றி விட்டது. தமிழ்நாட்டில் இருந்து வறுமை முழுமையாக ஒழிக்கப்படுவது வெகு தொலைவில் இல்லை என்பது தெளிவாகப் புரிகிறது. மகளிர் முழுமையான அதிகாரம் பெறுவது வெறும் ஏட்டு சுரைக்காய் அல்ல, அது வெகுவிரைவில் ஈடேறும் சாத்தியம் என்பதுவும் அனைவருக்கும் புரிந்து விட்டது. தமிழ்நாட்டின் கிராமப்புறங்கள் எல்லாம் மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்களால் நிரம்பி வழியப் போகிறது என்பதும் நிதர்சனமாகத் தெரிகிறது. ஒரு இயக்கம் நீடித்து நிலைபெறத் தேவையான அனைத்து அம்சங்களையும் இவ்வியக்கம் கொண்டுள்ளது. இருப்பினும் மனதின் ஓரத்தில் ஒரு சின்ன கலக்கம். அடுத்து வரும் காலங்களில் இந்த இயக்கத்தினை வழிநடத்திச் செல்லும் நிலையில் இருப்பது யார் என்ற நினைப்பினால் வந்த கலக்கம்; நாம் பெற்றுள்ள மிகப் பெரிய வெற்றியினைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தில் தோன்றிய உணர்வு; அழகிய குழந்தையினை ஈன்ற பெற்றோருக்கு ஏற்படும் உணர்வு போன்றது இது. தாம் சீராட்டி பாராட்டி வளர்த்த குழந்தை இன்று குமரி பருவத்தை எட்டிய நிலையில் அவளுக்கு எதிர்காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டுமே என்ற பெற்றோரின் ஆதங்கம் போன்றது.

இந்த கேள்வி எனக்கு மட்டுமல்ல உங்களில் பலருக்கும் தோன்றியிருக்கும். ஒரு இயக்கம் நிலைத்து நிற்க அதனை வழி நடத்தி செல்லும் பொறுப்பினை அவ்வியக்கத்தில் இணைந்துள்ள உறுப்பினர்கள் ஏற்க வேண்டும். ஒரு இயக்கம் தோன்ற உதவியவர்கள் நிரந்தரமானவர்கள் அல்ல. இயக்கமும் அதன் உறுப்பினர்களுமே நிரந்தரமானவர்கள். அதேபோல் சுய உதவிக் குழுவில் இணைந்துள்ள மகளிர் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றால் மட்டுமே சுய உதவிக் குழு இயக்கம் நிரந்தரமாக இருக்கும். இந்த அடிப்படையில் மகளிர், சுய உதவிக் குழு இயக்கத்தினை வழி நடத்திச் செல்லும் பொறுப்பினை ஏற்கும் வகையில் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சி வருங்காலத்தில் அவர்கள் ஏற்படுத்தும் கூட்டமைப்புகளின் வலிமை மற்றும் செயல்பாடுகளை பொறுத்தே அமையும் என்பதே வல்லுனர்களின் கருத்து. முதலில் இக்கூட்டமைப்புகள் ஊராட்சி அளவில் அமைக்கப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு என்பது ஒரு ஊராட்சியில் உள்ள அனைத்து குழுக்களும் இணைந்து தங்களை வழி நடத்தி செல்லவும், கட்டுப்படுத்தவும், மேம்பாட்டிற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஒரு அமைப்பினை தோற்றுவித்து நிர்வகிப்பது ஆகும். இந்த கூட்டமைப்பின் அவசியம் மற்றும் நன்மைகள், கூட்டமைப்பின் பணிகள், கூட்டமைப்பினை திறம்பட நிர்வகிக்கத் தேவையான வழிமுறைகள் பற்றி அடுத்த இதழில் காணலாம் (தொடரும்)

சுய உதவிக் குழுவில் இணைந்துள்ள மகளிர் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றால் மட்டுமே சுய உதவிக் குழு இயக்கம் நிரந்தரமாக இருக்கும். இந்த அடிப்படையில் மகளிர், சுய உதவிக் குழு இயக்கத்தினை வழி நடத்திச் செல்லும் பொறுப்பினை ஏற்கும் வகையில் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ப. சஞ்சீவ் குமார்

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

வணக்கம். கோவையில் கணபதி மகளிர் சுய உதவிக் குழு நடமாடும் உணவகத்தை தொடங்கி எவ்வாறு வெற்றி பெற்றார்கள் என்பதை இப்பகுதியில் பார்ப்போம். ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினருக்கும் நாம் சிறந்த தொழில் முனைவோராக வர வேண்டும் என்ற ஆசை சிறு செடியாக துளிர் விட வேண்டும். அது பாதுகாப்பாக வளர தேவையான சூழ்நிலைகளை தொண்டு நிறுவனம் ஏற்படுத்த வேண்டும். மேற்கூறியவாறு நடைபெற்ற ஒரு சம்பவம் பின்வருமாறு

கோவையில் கணபதி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் சார்ந்திருந்த தொண்டு நிறுவனம் மூலம் அடிப்படை பயிற்சிகளைப் பெற்ற பிறகு, ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அக்குழுவின் உறுப்பினர்களுக்குள் ஏற்பட்டது. அதை அவர்கள் தொண்டு நிறுவனத்திடம் தெரிவித்தார்கள்.

அப்பொழுது தொண்டு நிறுவனம் அமைந்திருந்த இடத்திற்கு அருகில் செயல்பட்டு வந்த டாக்டர் அம்பேத்கார் சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையம் 10 நாட்கள் இலவசமாக நடத்தும் சமையல் தொழில்நுட்ப பயிற்சிக்கு அழைப்பு விடுத்தது. தொண்டு நிறுவனம் அப்பயிற்சிக்கு கணபதி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை பரிந்துரை செய்து அனுப்பி வைத்தது. குழு உறுப்பினர்களும் பயிற்சியினை சிறப்பாகவும் முழுமையாகவும் பெற்றுத் தேர்ந்தனர்.

அச்சமயத்தில் குழு உறுப்பினர்களில் ஒருவருக்கு தெரிந்தவர் கோவையில் ஒரு உணவகம் நடத்தி வந்தார். அவர் நடமாடும் உணவகம் தொடங்க முடிவு செய்து சிறிய வேன் ஒன்றினை வாங்கினார். ஏற்கனவே சமையல் தொழில்நுட்ப

> நம்மைச் சுற்றிலும் நிறைய வாய்ப்புகளை கடவுள் கொடுத்துள்ளார். அதை நாம் எவ்வாறு பயன் படுத்துகிறாம் என்பதைப் பொறுத்தே நம் முன்னேற்றம் அமைகிறது.

பயிற்சி பெற்றிருந்த கணபதி சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அவரிடம் வேலைக்கு சேர்ந்தனர். உணவகத்தின் உரிமையாளர் தினந்தோறும் தக்காளி சாதம், புளி சாதம், தயிர் சாதம், வெஜிடபிள் பிரியாணி மற்றும் சப்பாத்தி ஆகிய உணவு வகைகளைத் தயாரித்துக் கொடுத்து விடுவார். குழு உறுப்பினர்கள் வேனில் அந்த உணவினை எடுத்து சென்று நகரின் முக்கிய பகுதிகளில் காலை 11.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை விற்பனை செய்து வந்தனர்.

இவர்கள் விற்பனை செய்யும் உணவு வகைகள் தரமுள்ளதாகவும், விலை குறைவாகவும் இருந்ததால் விற்பனை அதிகரித்து வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் உயரத் தொடங்கியது. ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை நடமாடும் உணவகத்தினை தேடி வர ஆரம்பித்தனர். தினந்தோறும் விற்பனை முடிந்தபிறகு வேனையும், பாத்திரங்களையும் உணவக உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட்டு குழுவினர் வந்து விடுவார்கள். உணவக உரிமையாளர் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 100/– ஊதியமாக வழங்கினார். குழு உறுப்பினர்கள் வருவாய் பெற்று வந்ததுடன், உணவகம் நடத்துதல் தொடர்பான அனுபவத்தையும் பெற்றார்கள்.

> **ஆரம்பத்தில்** கணபதி மற்றும் சூரியகாந்தி ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு நடமாடும் உணவகம் நடத்துவதில் பயம் இருந்தது. ஆனால் அவர்களின் அயராத உழைப்பால் பெற்ற இலாபம் தன்னம்பிக்கையின் உச்சிக்கே அவர்களைக் கொண்டு சென்றுள்ளது என்றால் மிகையாகாது.

இந்நிலையில் ஆறு மாதங்கள் சென்ற பிறகு, கணபதி சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தாங்களே ஒரு வேன் வாங்கி நடமாடும் உணவகத் தொழிலை நடத்தலாமே என்று யோசித்தனர். இதை அறிந்து கொண்ட உணவகத்தின் உரிமையாளர் தன்னுடைய வேனை அக்குழுவிற்கு விற்க சம்மதித்தார். தேவையான உணவு வகைகளை மட்டும் தன்னுடைய உணவகத்தில் வாங்கிக் கொள்ளுமாறு வேண்டினார். இதற்கு குழு உறுப்பினர்கள் மறுத்ததால், உணவகத்தின் உரிமையாளர் வேறு வழியில்லாமல் வேனை மட்டும் அக்குழுவிற்கு விற்று விட்டார். பிறகு குழு உறுப்பினர்கள் வேறு ஒரு புதிய ஓட்டுனரை வேலைக்கு அமர்த்தினர். உணவுகளை தாங்களே தயார் செய்தனர். விற்பனை நன்றாக இருந்தது. தங்களின் அயராத முயற்சியால் படிப்படியாக வளர்ந்து தற்போது ஏழு இடங்களில் நடமாடும் உணவகத்தின் மூலம் உணவுப் பொருட்களை விற்பனை செய்து வருகிறார்கள். இந்நிலையில் கணபதி மகளிர் சுய உதவிக் குழுவினர் நடமாடும் உணவகத்தினை நடத்தி வெற்றிகரமாக செயல்பட்டு வருவதைக் கண்டு, அக்குழு இணைந்துள்ள தொண்டு நிறுவனத்தில் செயல்பட்டு வரும் சூரியகாந்தி மகளிர் சுய உதவிக் குழு நடமாடும் உணவகத்தினை தொடங்கி தற்போது ஒன்பது இடங்களில் உணவுப் பொருட்களை விற்பனை செய்து அதிக வருமானம் ஈட்டி வருகின்றனர்.

ஆரம்பத்தில் கணபதி மற்றும் சூரியகாந்தி ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு நடமாடும் உணவகம் நடத்துவதில் பயம் இருந்தது. ஆனால் அவர்களின் அயராத உழைப்பால் பெற்ற இலாபம் தன்னம்பிக்கையின் உச்சிக்கே அவர்களைக் கொண்டு சென்றுள்ளது என்றால் மிகையாகாது. ■

செய்யும் தொழிலில் வெற்றி பெற...

– வி. எம். சிவகுமார்

'தெரியாத தொழிலை தொட்டவனும் கெட்டான் – தெரிந்த தொழிலை விட்டவனும் கெட்டான்' என்பது பழமொழி. தோல்வி அடைந்த சுய உதவிக் குழுக்களை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் தங்களுக்கு சம்பந்தமில்லாத தொழிலை தேர்ந்து எடுத்திருப்பது கண்கூடாகத் தெரியும்.

எனவே தொழில் செய்ய விரும்பும் சுய உதவிக் குழு பெண்கள் தாங்கள் தொழிலை தேர்ந்தெடுக்கும் முன்பு கீழ் காண்பவை குறித்து நினைவில் கொள்ள வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆர்வம் உள்ளதா என்பதை குழுக் கூட்டத்தில் விவாதித்து தெரிந்து கொள்ள வேண்டும். விருப்பம் இல்லாத தொழிலை தவிர்க்க வேண்டும். தொழில் செய்வதற்கான வாய்ப்பு அந்தப் பகுதியில் உள்ளதா? மூலப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்குமா? அத்தொழிலை மேற்கொள்ள தங்களுக்கு திறன் உள்ளதா? அப்பயிற்சிகளின் மூலம் திறனை வளர்த்துக் கொள்ள முடியுமா? என்பதை ஆராய்ந்து, முடியும் என்றால் மட்டும் அத்தொழிலை தேர்வு செய்ய வேண்டும்.

தொழிலுக்கான சந்தை வாய்ப்புகள் எவ்வாறு உள்ளது என்பதை முன் கூட்டியே கணித்துக் கொள்ள வேண்டும். சந்தை வாய்ப்பு இல்லாத அல்லது மிகக் குறைந்த வாய்ப்பு உள்ள தொழிலை தவிர்த்தல் நல்லது.

தங்கள் தகுதி, திறமை ஆகியவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் ஏதேனும் ஒரு தொழிலை தேர்ந்தெடுத்து வருவாயைப் பெருக்க வேண்டும். சுய உதவிக் குழுக் கண்காட்சிகள் / அங்காடிகள் போன்றவற்றில் தங்கள் பொருட்களை விற்பனைக்கு வைப்பதுடன், அவற்றில் பிற சுய உதவிக் குழுக்கள் எவ்வாறு பங்கேற்கின்றன எனபதையும் பார்வையிட வேண்டும். அதன் மூலம் தொழில் சார்ந்த புதிய எண்ணங்கள் தோன்றும். இவற்றையெல்லாம் பின்பற்றினால் திறமையாக தொழில் செய்யும் சுய உதவிக் குழுவாக நாம் பயன் பெறலாம்.

தூத்துக்குடி

கஸ்தூரிபா மகளிர் மன்றம்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், புதூர் கிராமத்தில் கஸ்தூரிபா மகளிர் மன்றம் செயல்பட்டு வருகிறது. மகளிர் திட்டம் மூலம் பயிற்சிகள் பல பெற்று, ஊறுகாய், அப்பளம், மசால் பொடி போன்ற உணவுப் பொருட்களை தயாரித்தல் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை வாங்கி விற்றல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பிடி அரிசி சேர்த்து, 3 மாதங்களுக்கு ஒருமுறை ஏழை அல்லது கைம்பெண்களுக்கு கொடுத்து வருகின்றனர். படிக்கத் தெரியாத பெண்களுக்கு மாலை நேரங்களில் எழுதப் படிக்க கற்றுக் கொடுத்து வருகின்றனர். ஆண்டுதோறும் சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மகளிர் தினம் போன்றவற்றை இக்குழுவின் உறுப்பினர்கள் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

கிராம சபைக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் கிராம முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகின்றனர். மேலும் தங்கள் பகுதியில் சுகாதாரத்தை மேம்படுத்துதல், மக்கள் உடல் நலத்தைப் பேணுதல் போன்றவற்றிற்கு தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ■

ஆண்டுதோறும் சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மகளிர் தினம் போன்றவற்றை இக்குழுவின் உறுப்பினர்கள் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

நாகை

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு

நாகை மாவட்டம், கூறைநாடு மயிலாடுதுறை பகுதியில் வசித்து வரும் திரு. பீர்முகமது அவர்களின் மகன் முகம்மது சிக்கந்தர் என்பவர் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் இளைஞர் தொழிற்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை பெஸ்ட் தொழிற்பயிற்சி பள்ளியில் நடத்தப்பட்டு வரும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பயிற்சியில் பேக்கரி புரொடக்ஷன் பிரிவில் பயிற்சி பெற்றார்.

சிறந்த முறையில் பயிற்சியினை முடித்த இவர் தற்போது மலேசியா நாட்டில் ஓஷன் ரெசிடென்ஸி ஓட்டலில் பணி புரிந்து வருகிறார். இவருக்கு மாதம் ஊதியமாக ரூபாய் 13,000/- கிடைக்கிறது. தன்னுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்த மகளிர் திட்டத்திற்கு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார் திரு. முகம்மது சிக்கந்தர். ■

திருநெல்வேலி

பயிற்சியாளர்களின் நன்றி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக அனைத்து மாவட்டங்களிலும் தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏராளமான இளையோர் தொழிற்பயிற்சி பெற்று ஏற்ற வேலைவாய்ப்புகளைப் பெற்று தங்கள் வாழ்வில் ஏற்றம் பெற்று வருகின்றனர். திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் கீழ் ஏராளமான இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு ஏற்ற வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஸ்கேன் அசிஸ்டென்ட் பயிற்சி பெற்று தற்போது நெல்லை ஸ்கேன் என்ற நிறுவனத்தில் மாதம் ரூ. 5,000/– ஊதியத்தில் பணிபுரிந்து வரும் திருமதி. ஏ. ஆரோக்கிய ஜான்சி மற்றும் எக்ஸ்ரே டெக்னீசியன் பயிற்சி பெற்று தற்போது நெல்லை காந்திமதி மருத்துவமனையில் ரூ. 4,000/– ஊதியத்தில் பணிபுரிந்து வரும் செல்வி. பி. செல்வ ஆனந்தி ஆகிய இருவரும், தங்களுக்கு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு பெற்றுத் தந்து தங்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கித்தந்த தமிழக அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும், அதன் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பயிற்சி அளித்த நிறுவனங்களுக்கும் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

கரூர்

விற்பனைப் பொருட்காட்சி

கரூர் பசுபதீஸ்வரர் திருக்கல்யான விழாவினையொட்டி மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனைப் பொருட்காட்சி நடைபெற்றது. கரூர் ராணி சீதை ஆச்சி மண்டபத்தில் நடைபெற்ற இப்பொருட்காட்சியை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். மாவட்டத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் சார்பில் 10 கடைகள் அமைக்கப்பட்டு இருந்தன.

இப்பொருட்காட்சியில் கைவினைப் பொருட்கள், பட்டுக் கூடால் உருவாக்கப்பட்ட பூக்கள், மாலைகள், சத்துமாவு, மூலிகைப் பொருட்கள், வத்தல், வடகம், ஊறுகாய், முருங்கை இலை பவுடர், கைத்தறி மிதியடிகள், ஆயத்த ஆடைகள், நவீன ஆபரணங்கள் மற்றும் களிமண் பொம்மைகள் போன்றவை அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டன.

சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் என்பதால் பொதுமக்கள் விரும்பி வாங்கி சென்றதுடன், விற்பனை செய்யும் பெண்களை பாராட்டிச் சென்றது பொருட்காட்சியில் கலந்து கொண்ட சுய உதவிக் குழுவினரை ஊக்கப்படுத்துவதாக அமைந்தது. ■

கைவினைப் பொருட்கள், பட்டுக் கூடால் உருவாக்கப்பட்ட பூக்கள், மாலைகள், சத்துமாவு, மூலிகைப் பொருட்கள், வத்தல், வடகம், ஊறுகாய், முருங்கை இலை பவுடர், கைத்தறி மிதியடிகள், ஆயத்த ஆடைகள், நவீன ஆபரணங்கள் மற்றும் களிமண் பொம்மைகள் போன்றவை அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டன.

திருச்சி

சுழல் நிதி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மிகச்சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, மானியத்துடன் கூடிய நேரடிக் கடன் ம ற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை இணை அமைச்சர் திரு. து. நெப்போலியன், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. கி. தனவேல், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு. தா. சவுண்டையா, இ.ஆ.ப., மாநகர மேயர் திருமதி. எஸ். சுஜாதா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ■

175 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் 25 குழுக்களுக்கு நேரடிக் கடன் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

திருவள்ளூர்

சுழல் நிதி மற்றும் நேரடிக் கடன்

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி – பட்டாபிராம் இடையே கட்டப்பட்டுள்ள பாலம் திறப்பு விழா சமீபத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் 175 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் 25 குழுக்களுக்கு நேரடிக் கடன் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திரு. டி.பி.ராஜேஷ், இ.ஆ.ப., மற்றும் மகளிர் திட்ட அலுவலர் திரு. கே. செல்வராஜ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். ■

வேலூர்

குழுக் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள்

வேலூர் மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், திறன் வளர்த்தல் பயிற்சி, கொத்தனார் பயிற்சி, பூமாலை வணிக வளாகம் மற்றும் மாவட்ட சிறை மறுவாழ்வு சங்கம் ஆகியவைகளின் செயல்பாடுகளை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். வாலாஜா ஊராட்சி ஒன்றியம், திருப்பாற்கடல் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுமைதாங்கி பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்து, கூட்டமைப்புகள் மேலும் சிறப்பாக செயல்பட ஏற்ற அறிவுரைகளை வழங்கினார். இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம், புதுப்பாடி ஸ்ரீ சித்தீஸ்வரர் பாலிடெக்னிக் கல்லூரியில் வழங்கப்பட்டு வரும் கொத்தனார் பயிற்சியினை பார்வையிட்டு, பயிற்சியின் தன்மை, வேலைவாய்ப்பு போன்றவை குறித்து தக்க ஆலோசனைகளை வழங்கினார். வேலூர் பூமாலை வணிக வளாகத்தில் ஆய்வு மேற்கொண்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் கடைகளை பார்வையிட்டு, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்கள், அவைகளின் தரம், சந்தை வாய்ப்புகள் ஆகிய விபரங்களையும், விற்பனையை மேம்படுத்தவும், அதிக வருவாய் ஈட்டவும் உரிய வழிவகைகளை கூறினார். ■

வேலூர் கோட்டையில் அமைந்துள்ள முன்னாள் சிறைவாசிகள் நல்வாழ்வு சங்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் காலணி தயாரிப்பு பயிற்சி மையத்தை பார்வையிட்டு, அங்கு அளிக்கப்பட்டு வரும் பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி

பயிற்சி துவக்க விழா

கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் சார்பில் தொழில் முன்னேற்றப் பயிற்சி துவக்க நிகழ்ச்சி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து, தையற் பயிற்சிக்கான சாதனங்களை பயிற்சியாளர்களுக்கு வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பி. பிரபாகர், மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சரஸ்வதி கணேசன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

விழுப்புரம்

கிராம சபைக் கூட்டம்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த வீரபாண்டியில் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பராசக்தி மகளிர் சுய உதவிக் குழுவும் கலந்து கொண்டது. ஊராட்சி மன்ற தலைவி திருமதி. ராதா கோவிந்தன் அவர்கள் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் குடிநீர், மின்சாரம், சாலை செப்பனிடுதல் போன்ற அடிப்படை வசதிகளை செய்திட வேண்டும் என பராசக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மாவட்டச் செய்திகள்

சென்னை — மகளிர் திட்ட அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் செயல் பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னையில் உள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், 32 மாவட்ட திட்ட அலுவலர்கள் மற்றும் 64 உதவித் திட்ட அலுவலர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்டம் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள், புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், சுழல் நிதி வழங்குதல், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல், அவைகளுக்கு பெருங்கடன் பெற்றுத் தருதல், இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் இளையோர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள் மற்றும் பணி வாய்ப்புகள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல், விற்பனைக் கண்காட்சிகள் நடத்துதல், பூமாலை வணிக வளாகம் போன்ற அனைத்து திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை மகளிர் திட்டத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் அடைந்துள்ள இலக்குகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள், மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்கள் ஆகியவை குறித்த ஆலோசனைகளும், மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளும் ஆய்வுக் கூட்டத்தில் மேற் கொள்ளப்பட்டது.

> **சுய உதவிக் குழுக்களின்** உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல், விற்பனைக் கண்காட்சிகள் நடத்துதல், பூமாலை வணிக வளாகம் போன்ற அனைத்து திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சிவகங்கை — கூட்டமைப்பிற்கு பெருங்கடன்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், இராஜகம்பீரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு பெருங்கடனாக ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் தங்களின் சீரிய செயல்பாட்டின் காரணமாக பல்வேறு வெற்றிகளை பெற்று வருகின்றன. அவைகள் மேலும் சிறப்பாக செயல்படுவதற்கு ஏற்ப, தொழில் பயிற்சிகள், சுழல் நிதி, பொருளாதாரக் கடன் போன்றவைகளை மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொகையினைக் கொண்டு சுய உதவிக் குழுக்களும், கூட்டமைப்புகளும் தங்களது தொழில் சார்ந்த செயல்பாடுகளை நன்கு வலுப்படுத்தி வருகின்றன.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், இராஜகம்பீரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு பெருங்கடனாக ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட அலுவலர் திரு. சா. சீனிவாசன், உதவித் திட்ட அலுவலர் திரு. மருது பாண்டியன் மற்றும் பாண்டியன் கிராம வங்கி மேலாளர் திரு. கோபால் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

50 ஆயிரம் மகளிர் குழுக்கள் அமைக்க முடிவு

கடலூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர் மன்ற அரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் திரு. சீத்தாராமன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். மகளிர் திட்ட அலுவலர் திரு. கணேசன், வங்கிகளின் மேலாளர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், நபார்டு உதவி பொது மேலாளர் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பேசியதாவது 'நடப்பாண்டில் தமிழகத்தில் 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 24 ஆயிரம் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 1,850 குழுக்கள் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் இதுவரை 1,186 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இருந்தும் 3,260 குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 1,128 குழுக்களுக்கு சுழல் நிதியும், 258 குழுக்களுக்கு பொருளாதாரக் கடனும் வழங்கத் திட்டமிட்டு, இதுவரை 175 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 263 பேருக்கு இளைஞர் திறன் பயிற்சியும், 120 பேருக்கு கொத்தனார் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. ooo

பின்னர் மேலாண்மை இயக்குநர் அவர்கள், குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் ஸ்பீடு தொண்டு நிறுவனத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட அன்னை தெரசா மற்றும் ரோஜாக் கூட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், உ.கொளப்பாக்கம் ஊராட்சி, அரசக்குழி கிராமத்தில் 3 சுய உதவிக் குழுக்கள் இணைந்து பீங்கான் பொருட்கள் தயார் செய்யும் உற்பத்திக் கூடம் ஆகியவற்றில் கள ஆய்வு மேற்கொண்டு அக்குழுக்கள் மேலும் சிறப்பாக செயல்பட தக்க ஆலோசனைகளை வழங்கினார். ■

70 ஆயிரம் குழுக்களுக்கு இவ்வாண்டு சுழல் நிதி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 30 ஆயிரம் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. கடன் இணைப்புத் திட்டத்தின் மூலம் 3 ஆயிரம் கோடி வழங்க முடிவு செய்யப்பட்டு இதுவரை 990 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

அன்னை
கஸ்தூரிபாய் காந்தி

அம்மையாரிடம் அவர் இதை தெரிவித்த போது, அவரும் அதை ஏற்றுக் கொண்டார். 37ஆவது வயது முதற்கொண்டு, அவர்கள் கணவன் மனைவியாக வாழவில்லை. பிறருக்காக உழைக்கத் தங்களை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டனர்.

ஒருமுறை கஸ்தூரிபாய் கடுமையான நோயால் அவதிப்பட்டார். மருந்து சாப்பிட முடியாத அளவிற்கு உடல் நலிவுற்றது. மருத்துவர் உடலைத் தேற்ற இறைச்சியும் சூப்பும் சாப்பிட வற்புறுத்தினார். காந்தி அப்பொழுது வெளியூரில் இருந்தார். தம் மனைவி விரும்பினால் அவற்றை சாப்பிடலாம் என்றார். ஆனால், கஸ்தூரிபாய் இறைச்சி சாப்பிட விரும்பவில்லை. மரக்கறி உணவு சாப்பிட்டே உடலைத் தேற்றினார். அகிம்சையைத் தம் கொள்கையாக ஏற்றுக் கொண்ட கஸ்தூரிபாய், அதிலிருந்து தவற ஒருபோதும் விரும்பவில்லை.

1906இல், காந்தி அவர்கள் நெடுநாள் சிந்தித்து இல்லறத்திலேயே பிரம்மசாரியம் பேண முடிவெடுத்தார். அம்மையாரிடம் அவர் இதை தெரிவித்த போது, அவரும் அதை ஏற்றுக் கொண்டார். 37ஆவது வயது முதற்கொண்டு, அவர்கள் கணவன் மனைவியாக வாழவில்லை. பிறருக்காக உழைக்கத் தங்களை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டனர்.

அக்டோபர், 1913இல் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் முதன்முதலில், ஆங்கிலேயர்களை எதிர்த்துச் சத்தியாகிரக போராட்டத்தைத் தொடங்கினார்.

இதில் பெண்களைக் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். ஆனால், தம் மனைவியை அவர் அழைக்கவில்லை. இதைக் கண்ட கஸ்தூரிபாய் தானே முன் வந்து போராட்டத்தில் கலந்து கொண்டார். மேலும் 15 பெண்கள் அப்போராட்டத்தில் ஈடுபட்டனர். தென்னாப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க் நகரிலிருந்து நியூகாஸில் நகருக்கு அப்பெண்கள் (சத்திகாகிரக) படை நடந்தே சென்றது. இப்படையினர் டிரான்ஸ்வால் என்ற நகரில் தடைசெய்யப்பட் எல்லையைக் கடக்கும் போது கைது செய்யப்பட்டு, 3 ம ாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்றனர்.

அம்மையார் அது முதல் காந்தியடிகளின் அனைத்துப் போராட்டங்களிலம் துணை நின்று, தேசத்திற்குத் தன் பங்களிப்பைச் செய்துள்ளார்.

1915இல் காந்தியடிகள், குடும்பத்துடன் இந்தியா திரும்பினார். 1916இல் அகமதாபாத் அருகில், சபர்மதி நதிக்கரையில் ஆசிரமம் தொடங்கினார். அதில் ஆண்கள், பெண்கள் என 25 பேர் சேர்ந்தனர். அனைவருக்கும் கஸ்தூரிபாய் தாயாக விளங்கினார். அனைவருக்கும் சமையல் செய்யும் பணியைத் தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார். அவ்வாசிரமத்தி ற்குக் கவிக்குயில் சரோஜினி நாயுடு வருகை தந்தார். கஸ்தூரிபாய் அம்மையாரின் எளிமை, பொறுமை, அடக்கம் ஆகிய பண்புகள் அவரை மிகவும் கவர்ந்தது. உடனே அவரைப் பற்றிப் புகழ்ந்து பத்திரிக்கைகளில் எழுதினார்.

ஒருமுறை ஆசிரமத்திற்கு ஓர் அரிசன குடும்பம் வந்து தங்கியது. கஸ்தூரிபாய் அதை விரும்பவில்லை. சில ஆசிரமவாசிகளும் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. காந்தியடிகள் அனைவரிடமும் தீண்டாமை கூடாது என்ற மனிதாபிமானத்தை எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்காததால் ஏழு நாட்கள் உண்ணா நோன்பிருந்தார். அப்பொழுது அம்மையாரும், மற்றவர்களும் காந்தியின் கொள்கைகளைப் புரிந்து கொண்டு, அது முதல் அரிசனங்களுடன் ஒன்றாகப் பழகினார். இச்சம் பவத்திற்குப் பின் கஸ்தூரிபாய் அம்மையார் அரிசன முன்னேற்றத்திற் காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். ஆசிரமத்தில் இருந்து இலட்சுமி என்ற அரிசனப் பெண்ணைத் தன் மகளாக ஏற்றுக் கொண்டார்.

> **அந்த ஆசிரமத்திற்குக்** கவிக்குயில் சரோஜினி நாயுடு வருகை தந்தார். கஸ்தூரிபாய் அம்மையாரின் எளிமை, பொறுமை, அடக்கம் ஆகிய பண்புகள் அவரை மிகவும் கவர்ந்தது. உடனே அவரைப் பற்றிப் புகழ்ந்து பத்திரிக்கைகளில் எழுதினார்.

1917 இல், பீகாரில் 'சம்பரான்' என்ற இடத்தில் அரிசன மக்கள் மிகவும் துன்பமடைந்ததை அறிந்து காந்தி அங்கு அவர்களுக்கு உதவச் சென்றார். கஸ்தூரிபாயும் அதனை அறிந்து அவர்களுக்கு உதவச் சென்றனர். அம்மை யார் ஒவ்வொரு குடிசைக்கும் நேரில் சென்று சுத்தம் பற்றிக் கற்பித்தார். நல்வாழ்க்கை நடத்துவதற்கான வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தார்.

காந்தியடிகள், இன்புளுயன்சா என்ற கடும் காய்ச்சலால் துன்புற்று உடல் மெலிந்தார். அவர், பசும்பாலோ, எருமைப்பாலோ, குடிப்பதில்லை என்று சபதம் ஏற்றிருந்ததால் உடல் மிகவும் சீர்குலைந்தது. அச்சமயம் கஸ்தூரிபாய் ஆட்டுப்பால் குடிக்கச் சொல்லி வற்புறுத்தினார். காந்தி யடிகளும் அதை ஏற்றார்.

1922 டிசம்பரில் பஞ்சாபில் நடைபெற்ற முதல் பெண்கள் மாநாட்டினை கஸ்தூரிபாய் தலைமை ஏற்றுச் சிறப்பாக நடத்தித் தந்தார். 1931இல், இராஜ்கோட் கிளர்ச்சியில் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். கஸ்தூரிபாய் தானே தலைமையேற்று சத்தியாகிரக போராட்டத்தை நடத்தினார். அப்பொழுது அவர் கைது செய்யப்பட்டு ஒரு கிராம சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு சிறிதும் வசதியின்றி அம்மையார் நோயால் வாடினார். அதன் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக உடல் நலிவுற்றார்.

கஸ்தூரிபாய்க்கு 1943 மார்ச்சில் இருதய நோய் ஏற்பட்டது. டிசம்பரில் நோய் மிகக் கடுமையானது. அந்தச் சமயத்தில், காந்தியடிகளின் உதவியாளரான மகாதேவ தேசாயும் கடுமையான இருதய நோய்க் காரணமாகத் திடீரென்று இறந்தார். 1943 பிப்ரவரி 10ஆம் தேதி தொடங்கி, மார்ச் 3ஆம் தேதி வரை 21 நாட்கள் காந்தியடிகள் ஆகாகான் அரண்மனையில் 'உண்ணாவிரதம்' மேற்கொண்டார்.

இவையெல்லாம் அம்மையாரின் உடல் நலத்தை மிகவும் பாதித்தது. அதனால் அவர் அடுத்தடுத்து ஒரே வாரத்தில் இருமுறை இருதய கோளாறுக்கு ஆளாகி படுத்த படுக்கையானார். அவருடைய மகன்களும், பேரன் பேத்திகளும், ஆகாகான் அரண்மனையில் அவருடன் இருக்க அனுமதிக்கப்பட்டனர். நோயின் கடுமை காரணமாக, கஸ்தூரிபாய் 1944 பிப்ரவரி 22ஆம் நாளன்று சிறையிலேயே தம் கணவர் மடியிலேயே உயிர் நீத்தார். சிறைக்குள் மகன் தேவதாஸ் இறுதிச் சடங்குகளைச் செய்தார். நாடெங்கும் கடையடைப்பும், அனுதாபக் கூட்டங்களும், மௌன ஊர்வலங்களும் நடைபெற்றன. பண்டித மதன் மோகன் மாளாவிய–ாவின் வேண்டுகோளுக்கு இணங்க, மார்ச் 5ஆம் நாள் நாடெங்கும் 'கஸ்தூரிபாய் தினம்' அனுசரிக்கப்பட்டது.

நம் நாட்டு விடுதலைக்குக் காந்தியடிகள் பெரும் காரணம் என்றால் கஸ்தூரிபாய் அம்மையாரும் மிகப் பெரும் காரணமாக உணரப்பட வேண்டும். குடும்பம் என்ற எல்லையிலிருந்து மகாத்மா, அன்னை கஸ்தூரிபாய் துணையுடன் எளிதாக மீண்டதால் தான் நாட்டு விடுதலைக்கு அவரால் ஒருமையுடன் பாடுபட முடிந்தது.

மகாத்மா காந்தி, தம் வீட்டில் இருந்தே போதனைகளையும் செயல்பாடுகளையும் தொடங்கி வெற்றி கண்டதால் தான் அவருக்கு வெளியிலும் வெற்றி எளிதானது.

இந்தியப் பெண்களின் பண்புக்கும், பாரம்பரியத்திற்கும் கஸ்தூரிபாய் காந்தி ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். அவரின் எளிமை, தூய்மை, அன்பு, பொறுமை, தன்னடக்கம், தாய்மை என்ற பண்பு நலன்கள் இந்தி யப் பெண்களுக்குத் தூண்டுகோலாகவும், முன் மாதிரியாகவும் இருக்கிறது. 'காந்தியால் கஸ்தூரிபாய் தகுதி பெற்றதும், கஸ்தூரிபாயால் காந்தி தகுதி பெற்றதும் இந்தியச் சகாப்தமாய் அமைந்து விட்டது"

நலமளிக்கும் நடைப்பயிற்சி



நடைப்பயிற்சி ஓர் அற்புதமான பயிற்சியாகும். இது இரத்த அழுத்தத்தை குறைப்பதோடு, இரத்தத்தில் உள்ள தீய கொழுப்புச் சத்தின் அளவைக் குறைத்து, நரம்புகளுக்குப் புத்துணர்ச்சி தந்து, எலும்புகளையும் உறுதியாக்குகிறது. எடையை குறைக்க விரும்புபவர்களுக்கும், உடலுக்கு வலுவான கட்டமைப்பை அளித்து ஆரோக்கியமானதாக இருக்க விரும்புபவர்களுக்கும் நடைப்பயிற்சி ஒரு உடற்பயிற்சியாக உள்ளது.

நடைப் பயிற்சியை மேற்கொள்பவர்களுக்கு மாரடைப்பு மற்றும் இதர இதய நோய்களின் தாக்குதல்கள், இப்பயிற்சியை மேற்கொள்ளாதவர்களோடு ஒப்பிடுகையில் பாதிக்கும் மேலாக குறைவாக உள்ளது என்று சமீபத்திய ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

நீங்கள் வேலைக்கு செல்லும் பயணத்தில் அதிகமாக நடக்க முயலுங்கள். இரயிலுக்கோ பேருந்துக்கோ நடந்து செல்லுங்கள், உங்கள் வாகனங்களை அலுவலகத்திலிருந்து சற்றுத் தொலைவில் நிறுத்தி விட்டு நடந்து செல்லுங்கள், அருகிலுள்ள கடைகளுக்கு நடந்து செல் லுங்கள், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் தூய்மையான காற்று வீசும் பகுதிகளில் நீண்ட நடைபயணம் சென்று மகிழுங்கள்.

நடக்கும் முறை

நெஞ்சை நிமிர்த்தி முன்னோக்கிப் பார்த்தவராக (தரையை பார்க்காமல்) இருபது அடி முன்னோக்கியவாறு நடங்கள்.

நெஞ்சை உயர்த்தியவாறு தோள்களைச் சாதாரணமாகவும், கைகளைத் தளர்வாகவும் வைத்திருங்கள்.

கைகளை முன்னும் பின்னும் ஒரே சீராக ஆட்டியவாறு (பக்கவாட்டில் ஆட்டாமல்) அதேவேளை நெஞ்சுப் பகுதியை விட உயர்த்தி விடாமல் நடந்து செல்லுங்கள்.

இயல்பாக சுவாசியுங்கள், நடக்கும்போது ஆழமாகவும், ஒரே சீரான வேகத்தில் சுவாசித்து

பயிற்சியின் துவக்க மாக ஒரே வேகத்தில் சுமார் 5 நிமிடங்கள் நடந்து பின்னர் கைகால்களை நீட்டவும். இதன் மூலம் நரம்புகளில் ஏதேனும் சோர்வோ அல்லது வீக்கமோ ஏற்படு வதிலிருந்து காத்துக் கொள்ளலாம்.

பிராணவாயுவை அதிகமான அளவில் உட்செலுத்திக் கொள்ளுங்கள். நடக்கும் போது வேகமாகவும், அதே நேரத்தில் மூச்சிறைக்கும் அளவிற்கு இல்லாமலும் பார்த்துக் கொள்ளுங்கள்.

நடக்கும் போது செய்யக் கூடாதவைகள்

அதிக வேகமாக நடத்தல்

கைகளை வேகமாக ஆட்டியவாறு நடத்தல்

எந்நேரமும் தரையை நோக்கியவாறு நடத்தல்

கைகளில் ஏதேனும் எடையைத் தூக்கிக் கொண்டோ அல்லது இடுக்கிக் கொண்டோ செல்லுதல்

கல்லீரல் நோய் வராமல் பாதுகாக்க வேண்டும். அதற்காக கரிசலாங்கண்ணி கீரையை தினமும் சாப்பிட வேண்டும். தினமும் திராட்சை சாப்பிடுவதும் நல்லது.

எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?

உடல் நலத்தை இதர நடவடிக்கைகளுடன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க – 20 முதல் 30 நிமிடங்கள் வரை வாரத்தின் அதிக நாட்கள் பேசிக் கொண்டே செல்லும் வேகத்தில் நடக்கவும்.

எடையில் கட்டுப்பாடு – 30 முதல் 45 நிமிடங்கள் வரை இலகுவான வேகத்தில் எத்தனை நாட்கள் நடக்க இயலுமோ அத்தனை நாட்கள் நடக்கவும். ஒரே சீரான வேகத்தில் நடப்பதில் குறியாக இருக்கவும். தொடர்ந்து பேசக் கூடிய நிலையில் ஆனால் சுவாசிக்க சற்றே சிரமமாக இருக்கும் நிலையில் முடித்துக் கொள்ளலாம்.

இதய / சுவாசக் குழாய் ஆரோக்கியம் – 20 நிமிடங்கள் வேகமாக நடக்கவும். மலை அடிவாரப் பகுதிகளில் 2 முதல் 3 முறைகள் வரை ஒரு வாரத்தில் நடக்கவும். சுவாசத்தையும், இதய துடிப்பையும் அதிகப்படுத்தி அதே நேரம் வசதியான நிலையில் இருக்கவும். நடைபயிற்சி மேற்கொள்ளும் போது உடல் உறுப்புகள் ஏதாவதில் வலிகள் தோன்றக் கூடாது. அவ்வாறு வலி ஏற்படுமாயின் உடனே மருத்துவரிடம் செல்லுங்கள்.

நடைப்பயிற்சி துவங்கும் முன்

உடலில் பாதிப்பு ஏற்படும் இரத்த அழுத்தம் போன்றவைகள் ஏதும் இருப்பின் கண்டிப்பாக மருத்துவரைக் கலந்தாலோசித்தல் மிக நன்று.

பயிற்சியின் துவக்கமாக ஒரே வேகத்தில் சுமார் 5 நிமிடங்கள் நடந்து பின்னர் கைகால்களை நீட்டவும். இதன் மூலம் நரம்புகளில் ஏதேனும் சோர்வோ அல்லது வீக்கமோ ஏற்படுவதிலிருந்து காத்துக் கொள்ளலாம். நடைபயிற்சிக்குத் தகுந்த பாதையை தேர்வு செய்யுங்கள். தளர்வான ஆடை அணியுங்கள், சாலையோரங்களில் நடை பயிற்சி மேற்கொள்ளும் போது திடீர் என்று ஏற்படக் கூடிய அவசர நிலையை எதிர் கொள்ளவும் கவனமாக இருங்கள்.

உடல் நலத்திற்கு...

கிராம்பு

சரியான அளவில் கிராம்பை உபயோகிப்பது உணவிற்கு மணம் சேர்ப்பதோடு, சாப்பிட்ட உணவு செரிமானம் ஆகவும் உதவுகிறது. அதோடு ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைத்து கெட்ட கொழுப்பை கட்டுப்படுத்தவும், உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடல் எடையைக் குறைக்கவும் உதவுகிறது.

கசகசா

வாசனையும் சுவையும் உள்ள கசகசாவை சரியான அளவில் உணவில் சேர்ப்பதன் மூலம் நிம்மதியான ஆழ்ந்த உறக்கம் வரும்.

சோம்பு

பெருஞ்சீரகம் எனப்படும் சோம்பு அதன் பெயருக்கேற்றாற்போல் செயல்படுகிறது. பசியின் மையைப் போக்கி உணவுச் செரிமானமின்மையை சீராக்கி வயிற்றில் வாயு சேராமல் தடுக்கிறது.

பிரிஞ்சி இலை

ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை சீராக வைக்க சற்றே உதவும் பிரிஞ்சி இலை, மைக்ரேன் தலைவலியை பெருமளவில் குறைக்கவும் உதவுகிறது.

இஞ்சி

வாயுத் தொல்லை, அஜீரணம், கெட்ட கொழுப்பு, மலச்சிக்கல் போன்ற அனைத்து உபாதைகளுக்கும் நீக்கும் அருமருந்து இஞ்சியாகும். வயது அதிகரிக்க அதிகரிக்க உடலில் தோன்றும் சுருக்கங்களை குறைத்து நம் தோலை இளமையாக முதுமை அண்டாமல் வைக்க வல்லது.

பேரீச்சம்பழம்

நமது முழுமையான ஆரோக்கியத்திற்கு உகந்த உயர்ந்த நார்ச்சத்து, இரும்புச் சத்து, கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம், சல்பர் போன்ற மினரல்கள், வைட்டமின்கள், அமினோ அமிலங்கள் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிய சிறப்புக்குரியது பேரீச்சம்பழம். இது உணவை செரிக்க உதவி செய்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து மலச்சிக்கலை போக்குகிறது. ஒரு பேரீச்சம்பழத்தில் 23 கலோரிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வெல்லம்

எந்தவிதமான இரசாயனங்களோ, பல பொருட்களின் சேர்க்கையோ உபயோகப்படுத்தாமல் இயற்கையான கரும்புச் சாறில் இருந்து தயாரிக்கப்படும் வெல்லம், இரும்புச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், காப்பர் போன்ற மினரல்கள் மற்றும் மிதமான நார்ச்சத்து நிறைந்தது.

வளர்க வணிகம்

மரச்சிற்பங்கள்
சிற்பி ஆண்கள் சுய உதவிக் குழு,
பெரம்பலூர் மாவட்டம்.
செல்பேசி: 94435 91523
விலை: ரூ. 250/- முதல்

மண் பொம்மைகள்
அறிவொளி துளசி மகளிர்
சுய உதவிக் குழு,
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி: 94420 53646

அலங்கார பொம்மைகள்
தென்றல் சுய உதவிக் குழு,
கோவை மாவட்டம்.
செல்பேசி: 98422 75817

பனைஓலைப்பொருட்கள்
மல்லிகை அரசு மகளிர் மன்றம்,
திருவள்ளூர் மாவட்டம்.
செல்பேசி:97867 33184

களிமண் பொருட்கள்
நவசப்த கன்னி சுய உதவிக் குழு,
மதுரைமாவட்டம்.
செல்பேசி: 93624 16104

சணல் பைகள்
ஸ்ரீ துர்க்கையம்மன் மகளிர்
சுய உதவிக் குழு,
ஈரோடு மாவட்டம்.
செல்பேசி: 93447 82493

சென்னை மகப்பேறு மருத்துவ மனைகளில் உணவு வழங்க மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆணை

சென்னை மாநகராட்சியின் மூலமாக சென்னை மாவட்டத்திலுள்ள 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளுக்கு மூன்று வேளை உணவு வழங்க ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டது. அதன்பேரில் தமிழ்நாடு மகளிர் நல மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைப்படி சென்னை மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலமாக 24 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த ஒப்பந்தப் புள்ளியில் விண்ணப்பம் செய்தனர்.

பொதுவாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இம்மாதிரியான ஒப்பந்தப் புள்ளி பற்றிய விபரங்கள் ஏதும் தெரியாது. எனவே விண்ணப்பம் செய்த 24 குழுக்களுக்கும் சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் மூலமாக இந்த ஒப்பந்தப் புள்ளி பற்றிய தெளிவுரை வழங்கப்பட்டது. இது விண்ணப்பித்த குழுக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

விண்ணப்பம் செய்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைத்தும் இந்த ஒப்பந்தப் புள்ளியில் பங்கு பெற்றனர். இவர்களில் விலைப்புள்ளி குறைவாகக் குறிப்பிட்டிருந்த இந்திரா காந்தி, புதுமைப் பெண்கள், ஆராதனா, நாதம், நம்பிக்கை, குறிஞ்சி, செம்பருத்தி மற்றும் சங்கமம் ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முறையே டாக்டர் ஆர். கே. நகர், சஞ்சீவராயன்பேட்டை, புளியந்தோப்பு, செனாய் நகர், பெரும ாள்பேட்டை, வடபழனி, சைதாப்பேட்டை மற்றும் சாந்தோம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் மகப்பேறு மருத்துவமனைகளுக்கு உணவு வழங்க சென்னை மாநகராட்சி மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மகப்பேறு மருத்துவமனைகளுக்கு 25.09.2010 முதல் மேற்கண்ட 8 மகளிர் சுய உதவிக் குழுக்களும் காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளும் உணவு சமைத்து வழங்கி வருகின்றனர்.

விண்ணப்பம் செய்த 24 குழுக்களுக்கும் சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் மூலமாக இந்த ஒப்பந்தப் புள்ளி பற்றிய தெளிவுரை வழங்கப்பட்டது. இது விண்ணப்பித்த குழுக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்

விதவைகளுக்கு புதுவாழ்வு அளிக்க அவர்களின் மறுமணத்திற்கு 'டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்' என்ற பெயரில் தமிழக அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

வழங்கப்படும் நிதியுதவி

ரூபாய் 20,000/– (ரூ. 10,000/–க்கான காசோலை மற்றும் ரூ. 10,000/–க்கான தேசிய சேமிப்புச் சான்றிதழ்) திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருக்கு வழங்கப்படும்.

தகுதி

மணமகளின் குறைந்தபட்ச வயது 20 ஆக இருக்க வேண்டும். கல்வித் தகுதி, வருமான வரம்பு போன்றவை தேவையில்லை.

விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு

திருமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள்

விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய சான்றிதழ்கள்

1) மறுமணம் புரிந்து கொண்ட விதவையின் முதல் கணவரது இறப்புச் சான்றிதழ்
2) மறுமணம் புரிந்து கொண்ட பெண்ணின் வயது சான்றிதழ்
3) மறுமணம் புரிந்து கொண்டவர்களின் திருமண அழைப்பிதழ்
4) மணமகனின் (திருமணமாகியிருந்தால்) முந்தைய மனைவி / மனைவியரின் இறப்புச் சான்றிதழ் / பிரிவுச் சான்றிதழ்

விண்ணப்பங்களை பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்ட கால அளவு

விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்கள்

அணுக வேண்டிய அலுவலர்

1) மாவட்ட சமூக நல அலுவலர்

2) சமூக நல விரிவாக்க அலுவலர்

குறைபாடுகள் இருப்பின் அணுக வேண்டிய அலுவலர்

மாவட்டங்களில் – மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர்
மாநில அளவில் – சமூக நல ஆணையர், சென்னை – 5. தொலைபேசி எண் 044–28545728

திருவட்டத்துறை

செங்கல் தொழிலாளர்கள் கூட்டமைப்பு நவீன செங்கல் சூளை (VSBK)

கடலூர் மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படும் ஒவ்வொரு கிராமத்திலும் ஏழை மக்களின் வருமானம் மேம்பட, வாழ்வாதார வள ஆய்வு நடத்தப்பட்டு, அதன் மூலம் உள்ளூர் வளங்களைக் கண்டறிந்து, தொழில் வாய்ப்புகள் உருவாக்கிட இது ஏதுவாக உள்ளது. அதன் அடிப்படையில் நல்லூர் ஒன்றியம் இறையூர் பகுதிக்குட்பட்ட திருவட்டத்துறை கிராமத்திலும் வள ஆய்வு நடத்தப்பட்டது.

அதில் 105 குடும்பங்கள் செங்கல் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக கண்டறியப்பட்டு, திருச்சி அருகில் உள்ள தோகூர் கிராமத்தில் செயல்படும் நவீன செங்கல் சூளையை களப் பயணம் மேற்கொண்டு பார்வையிட்டு வந்த பின்பு 45 ஏழைக் குடும்பங்களை ஒருங்கிணைத்து செங்கல் தொழிலாளர்கள் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக ரூ. 15,33,125/– மதிப்பில் தொழிற்திட்டம் தயாரிக்கப்பட்டு மாநில திட்ட அலுவலகத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் நெறிமுறைகளின்படி தினத்தந்தி

கடலூர் மாவட்டச் சிறப்பு

நாளிதழில் டெண்டர் விளம்பரம் செய்யப்பட்டு, இந்த நவீன செங்கல் தொழில்நுட்பத்தில் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப நிறுவனமாக தஞ்சாவூர், கார்வர் என்விரோ இன்ஜினியரிங் என்ற நிறுவனத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டது. புனே TATA Energy Research Institute (TERI) நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் பணி துவங்கப்பட்டது.

இந்தத் தொழில் திட்டத்திற்கு

வங்கிக் கடனாக	ரூ.	6,89,906/-
மக்கள் பங்களிப்பாக	ரூ.	76,656/-
வாழ்ந்து காட்டுவோம் திட்ட நிதி	ரூ.	7,86,563/-
மொத்தம்	ரூ.	15,33,125/-

இறையூர் பஞ்சாப் நேஷனல் வங்கியிலிருந்து கூட்டமைப்பிற்கு கடன் பெறுவதற்கு காலதாமதம் ஏற்பட்டதால் கூட்டமைப்பில் இணைந்துள்ள 5 சுய உதவிக் குழுக்கள் மூலம் நேரடிக் கடன் பெற்று செங்கல் சூளைப்பணி தொடங்கப்பட்டது. திருவட்டத்துறை கிராமத்தில் கூட்டமைப்பில் இணைந்துள்ள 45 குடும்பங்களும் ஒரு நாளைக்கு 45,000 செங்கற்கள் உற்பத்தி செய்வதால் மக்கள் பங்கேற்போடு தேவையின் அடிப்படையில் கூடுதலாக ரூ. 18,00,000/- மதிப்பீட்டில் இரண்டு நவீன சூளைகளைக் கட்டி, ஒரு நாளைக்கு 10,000 செங்கற்கள் சுடுவதற்கு திட்டமிட்டு பணியும் முடிக்கப்பட்டது. 06.02.2010 முதல் செங்கற்கள் நவீன செங்கல் சூளையில் சுடப்பட்டு விற்பனையும் செய்யப்படுகிறது. இந்த செங்கற்களுக்கு திருவட்டத்துறை செங்கல் சங்கம் என்பதன் சுருக்கமாக (வீதீதீ) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

செங்கல் தொழிலாளர்கள் கூட்டமைப்பின் கனவுகள் நனவாகும் வகையில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு கடலூர் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலோடு 2,00,000 தரமான செங்கற்களை விற்பனை செய்துள்ளனர்.

மேலும் 45 ஏழைக் குடும்பங்கள் சுடாத பச்சை செங்கற்களை சேம்பர் உரிமையாளரிடம் ரூ. 700/- முதல் ரூ. 800/- வரை விற்பனை செய்து வந்தார்கள். ஆனால் அதை வாங்குபவர்கள் சுட்ட செங்கற்கலாக மாற்றி ரூ. 3000/-த்திற்கும் மேல் இலாபம் ஈட்டி வந்தனர். ஆனால் செங்கற்களை உற்பத்தி செய்த ஏழை மக்கள் குறைந்த இலாபமே ஈட்டி வந்தனர். தற்போது VSBK தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள நவீன செங்கற்சூளை மூலம் ஒரு நாளைக்கு 9,000 முதல் 10,000 வரை செங்கற்கள் சுடுவதால் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கே இலாபம் கிடைக்கின்றது. மேலும் நிலக்கரி மூலம் செங்கற்கள் சுடுவதால் தரமான செங்கற்களை சுற்றுச்சூழல் பாதிப்பு இன்றி உற்பத்தி செய்யப்படுகிறது.

VSBK தொழில் நுட்பத்தின் நன்மைகள்
- சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாது
- மழைக்காலங்களிலும் செங்கற்களை சுடலாம்
- தரமான செங்கற்களைப் பெறலாம்
- செங்கற்களின் நிறத்தைக் கூட்டலாம், குறைக்கலாம்
- குறைந்த எரிபொருளில் அதிக இலாபம் ஈட்டலாம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலோடு 45 ஏழை குடும்பங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட திருவட்டத்துறை செங்கல் தொழிலாளர்கள் கூட்டமைப்பின் கனவுகள் நனவாகும் வகையில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு கடலூர் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலோடு 2,00,000 தரமான செங்கற்களை விற்பனை செய்துள்ளனர். மேலும் VSBK தொழில் நுட்பத்தில் செங்கல் சூளை கட்டி செங்கல் உற்பத்தி தொழில் செய்ய ஆர்வமாக உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கவும் தங்களை தயார்ப்படுத்தி வருகின்றனர்.

காய்கறி உற்பத்தியாளர் தொழிற்குழு

கடலூர் மாவட்டம், வண்ணத்தூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் மலர்கள் மற்றும் காய்கறி உற்பத்தியாளர் தொழிற்குழு அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இக்குழு ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்பின் வாயிலாக அமுதசுரபி நிதியிலிருந்து ரூ. 4000/– கடனாகப் பெற்று, காய்கறிகள், கீரைகள், எள் போன்றவற்றை சாகுபடி செய்து, ரூ. 25,000/– வரை இலாபம் ஈட்டியுள்ளனர்.

தற்போது சாமந்தி சாகுபடி செய்துள்ளார்கள், இக்குழுவின் மூலமாக உறுப்பினர்களுக்கு தினமும் வேலைவாய்ப்பு இத்தோட்டத்திலேயே கிடைப்பதாக மகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள். ■

ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்பின் வாயிலாக அமுதசுரபி நிதியிலிருந்து ரூ. 4000/– கடனாகப் பெற்று, காய்கறிகள், கீரைகள், எள் போன்றவற்றை சாகுபடி செய்து, ரூ. 25,000/– வரை இலாபம் ஈட்டியுள்ளனர்.

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு

அமுதசுரபி நிதி

கடலூர் மாவட்டம், நல்லூர் ஒன்றியம், சிறுமங்கலம் ஒருங்கிணைப்பு பகுதிக்குட்பட்ட ஆதமங்கலம் ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்பு மூலமாக ரூ. 6,00,000/– அமுதசுரபி நிதி தொழில் செய்வதற்காக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது.

அமுதசுரபி நிதி தங்கள் ஊராட்சிக்கு கிடைத்ததன் மூலமாக, தாங்கள் தொடர்ந்து தொழில் செய்யவும், பொருளாதார ரீதியாக வாழ்க்கை வளம் பெறவும் வழிவகை செய்யப்பட்டு, தங்கள் வாழ்வில் நம்பிக்கையும், பிடிப்பும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார்கள் அக்கிராம மக்கள். ■

ஆதியூர் பஞ்சாயத்து அளவிலான மகளிர் குழுக் கூட்டமைப்புக்கு வங்கிப் பெருங்கடன் வழங்கும் விழா

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினால் மறு சீரமைப்பு செய்யப்பட்ட ஆதியூர் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக்கு வங்கிப் பெருங்கடன் வழங்கும் விழா ஆதியூர் கிராமத்தில் நடைபெற்றது. மாவட்ட திட்ட மேலாளர் திரு. நித்தியானந்தம் அவர்கள் முன்னிலையில், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திருமதி. மிருணாளினி அவர்கள் ரூ. 18.28 இலட்சத்திற்கான காசோலையை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

மேலும் 33 மாற்றுத் திறனாளிகளுக்கு தனி நபர் கடன் உதவியாக ரூ. 5.25 இலட்சமும், பால் உற்பத்தியாளர் தொழில் கூட்டமைப்பினைச் சேர்ந்த 60 நபர்களுக்கு கடன் தொகையாக ரூ. 6.10 இலட்சமும் என மொத்தம் ரூ. 27.63 இலட்சத்திற்கு கடன் உதவிகளை வங்கியின் தனி அலுவலர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் ஆதியூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஏ. துரைசாமி, சேப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். ■

கூட்டமைப்பினைச் சேர்ந்த 60 நபர்களுக்கு கடன் தொகையாக ரூ. 6.10 இலட்சமும் என மொத்தம் ரூ. 27.63 இலட்சத்திற்கு கடன் உதவிகளை வங்கியின் தனி அலுவலர் அவர்கள் வழங்கினார்கள்.

கடலூர் மாவட்டத்தில்

வெண்மைப் புரட்சி

தோராயமாக ரூ. 2,51,100/- வரை மாத வருவாய் பெற்று, தங்களுடைய வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றத்தையும் நம்பிக்கையினையும் பெற்று வருகின்றனர்.

நாள் ஒன்றுக்கு 540 லிட்டர் வீதம் ஒரு மாதத்திற்கு 16,200 லிட்டர் கொள்முதல் செய்வதன் மூலமாக, ஒரு லிட்டர் பாலுக்கு விலையாக ரூ. 15.50 வீதம் பெற்று வருகின்றனர்.

கடலூர் மாவட்டம், நல்லூர் ஒன்றியம், முருகன்குடி திட்ட ஒருங்கிணைப்புப் பகுதிக்குட்பட்ட வெண்கரும்பூர் மற்றும் காட்டு மயிலூர் ஊராட்சிகளில் பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம் துவக்கப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

இக்கூட்டமைப்புகளுக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் கடனாக வெண்கரும்பூர் ஊராட்சிக்கு ரூ. 4 இலட்சமும், காட்டு மயிலூர் ஊராட்சிக்கு ரூ. 6.10 இலட்சமும், அமுதசுரபி நிதி மூலமாக ஒரு நபருக்கு ரூ. 15,000/- முதல் ரூ. 25,000/- வரை ஒரு விழுக்காடு வட்டியுடன் கடனாக வழங்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் கறவை மாடு வாங்கி வளர்த்து பால் கறந்து விற்பனை செய்து வருகின்றனர்.

மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர் (வாழ்வாதாரம்) உதவியுடன் 'ஆவின்', களஞ்சியம் மற்றும் சேவா ஆகிய பால் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, நாள் ஒன்றுக்கு 540 லிட்டர் வீதம் ஒரு மாதத்திற்கு 16,200 லிட்டர் கொள்முதல் செய்வதன் மூலமாக, ஒரு லிட்டர் பாலுக்கு விலையாக ரூ. 15.50 வீதம் பெற்று வருகின்றனர்.

இக்கூட்டமைப்பு தோராயமாக ரூ. 2,51,100/- வரை மாத வருவாய் பெற்று, தங்களுடைய வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றத்தையும் நம்பிக்கையினையும் பெற்று வருகின்றனர். ■

கிராமத் தகவல் மையங்கள்

கடலூர் மாவட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படும் முதற்கட்ட ஒன்றியமான நல்லூரில் சேப்பாக்கம், சிறுமங்கலம், இறையூர், வேப்பூர் மற்றும் வெண்கரும்பூர் ஆகிய கிராமங்களில் தொழிற்கூட்டமைப்புகளின் விற்பனையை நிலை நிறுத்தவும், வலைதள இணைப்பினை கிராம மக்கள் எளிதாக அடையவும், பிற நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு பயன் அடையவும், கிராம மக்களுக்குத் தேவையான தகவல்களை உடனடியாக பெறக்கூடிய நோக்கங்களின் அடிப்படையில் கிராமத் தகவல் மையங்கள் துவக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தினை வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் மற்றும் மாவட்ட திட்ட மேலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் ஐந்து கிராமங்களின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் நிதியிலிருந்து ரூ. 9 இலட்சம் செலவில் 5 கணினிகள், பிரிண்டர், ஸ்கேனர் போன்ற கருவிகள் வாங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் என 375 நபர்கள் கணினிப் பயிற்சியினை நிறைவு செய்து உள்ளார்கள். தகவல் மையங்கள் வாயிலாக ரூ. 40 ஆயிரம் முதல் ரூ. 80 ஆயிரம் வரை ஒவ்வொரு மையத்திற்கும் வருமானம் வந்துள்ளது.

இம்மையங்களில் அடிப்படை கணினிப் பயிற்சி, விண்டோ, DCA, Ms-Office, Internet, Tally மற்றும் மல்டி மீடியா ஆகிய படிப்புகள் கற்பிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கிராம மையங்களிலும் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் என 375 நபர்கள் கணினிப் பயிற்சியினை நிறைவு செய்து உள்ளார்கள். தகவல் மையங்கள் வாயிலாக ரூ. 40 ஆயிரம் முதல் ரூ. 80 ஆயிரம் வரை ஒவ்வொரு மையத்திற்கும் வருமானம் வந்துள்ளது.

இத்தகவல் மையங்கள் மூலமாக மிகவும் ஏழையான இளைஞர்கள் பலர் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு பெற்று வருமானம் ஈட்டி வருகின்றனர். ■

மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் முன்னேற்றம்

கடலூர் மாவட்டம், நல்லூர் ஒன்றியம், சிறுமங்கலம் ஒருங்கிணைப்பு பகுதிக்குட்பட்ட மேலூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலமாக அமைக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுவினரும் இலக்கு மக்களை உறுப்பினராக கொண்ட சுய உதவிக் குழுவினரும் இணைந்து (23 நபர்கள்) மீன் உற்பத்தியாளர் நலச் சங்கம் என்ற பெயரில் மேலூரில் உள்ள குளத்தில் மீன் வளர்த்து வருமானம் ஈட்டி வருகின்றனர்.

நிதியாகப் பெற்ற ரூ. 60,000/–லிருந்து தலா ரூ. 25,000/– வீதம் இரண்டு குழுக்களும் முதலீடாக வைத்து இத்தொழிலை ஆரம்பித்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றனர். இவர்கள் முதலீடாக வைத்து ரூ. 50,000/–ல் மீன் குஞ்சு, மீனிற்கான உணவு, வண்டி வாடகை, வலை போன்ற செலவினங்களுக்கு செலவிட்டு, தினமும் ஒரு நபர் குளத்திற்கு சென்று மீன்களுக்கு உணவு வைக்க வேண்டும் என்றும் திட்டமிட்டு உள்ளனர்.

இவ்வாறு வளர்த்த மீன்களை விற்பனை செய்த வகையில் இவர்கள் ஈட்டிய மொத்தத் தொகை ரூ. 1,20,000/–. இதில் குழுக்களிடம் பெற்றக் கடன் ரூ. 50,000/–ஐ திருப்பிக் கொடுத்தது போக மீதி நிகர இலாபமாக ரூ. 70,000/– பெற்று, அப்பணத்தையும் மீன் வளர்க்க முதலீடாக போட்டு சிறப்பாக வளர்ந்து வருகின்றனர்.

இத்தொழில் குறிப்பாக மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைக்கான ஏணிப்படியாகக் கருதுவதால், முதல் ஏணிப்படியாக செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும், மேலூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர். இதனால் தங்களுக்கும் தன்னம்பிக்கை பிறந்துள்ளது என்றும் கூறுகின்றனர். ■

கடலூர் மாவட்டச் சிறப்பு

முதியோர் சுய உதவிக் குழுவா?

முதியோர் சுமைதாங்கியா?

குழுவாக சேர்ந்ததன் மூலமாக, தங்களின் உணர்வுகளையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள தங்கள் வயதையொத்தவர்களே கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது

கடலூர் மாவட்டத்தில், விருத்தாசலம் ஒன்றியம், கருவேப்பிலங்குறிச்சி ஒருங்கிணைப்பு பகுதிக்குட்பட்ட வண்ணான்குடிகாடு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், தங்கள் ஊராட்சியில் 90க்கும் மேற்பட்ட முதியவர்கள் வாழ்வில் புறக்கணிக்கப்பட்டு வருவதை கண்டறிந்து, மாவட்ட திட்ட மேலாளர் அவர்களின் பார்வைக்கு கொண்டு வந்தார்கள். மாவட்ட திட்ட மேலாளர் அவர்களின் வழிகாட்டுதலுடன் 2 பெண்கள் குழுவும், 2 ஆண்கள் குழுவும், 1 பழங்குடியினர் குழுவும் (இருபாலரும்) அமைக்கப்பட்டு, இவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 15/–ஐ மாதாந்திர சேமிப்பாக சேமித்து வருகின்றனர்.

மேலும் இவ்வாறு குழுவாக சேர்ந்ததன் மூலமாக, தங்களின் உணர்வுகளையும், கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள தங்கள் வயதையொத்தவர்களே கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது என்றும், தங்கள் கருத்துக்களையும், சிரமங்களையும் காது கொடுத்து கேட்க யாருமில்லை என்ற நிலை மாறி, தங்கள் வாழ்வில் புது வசந்தம் வீசத் துவங்கியுள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்கள்.

Published by S. CHINNAPPAN, on behalf of Mutram Society from Tamilnadu Corporation for Development of Women Ltd., 100, Anna Salai, Guindy, Chennai - 600 032. (59,000 copies circulated) an printed by C. JABAMANI. CANAAN PRESS PRIVATE LTD., 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

இளைஞர் திருவிழா 2010

இளவட்டம்

Youth Carnival 2010

ஆயிரத்தில் ஒருவராய் தனித்தன்மையுடன் வாழ்வோம்!

மற்றவர்களை திருப்திபடுத்துவதாக எண்ணி அபாயகர செயல்களில் ஈடுபட வேண்டாம். தாழ்வு மனப்பான்மையிலிருந்து மீள்வோம். நமக்கான விருப்பம், நம் சுய அடையாளம் மற்றும் சுய மதிப்பீடுகளை மதிப்போம், நேசிப்போம்.

எச்ஐவி அபாயத்திலிருந்து பாதுகாத்து கொள்வோம்.

வாழ்வை கொண்டாடுவோம்!!!

HEROES PROJECT | RED RIBBON CLUB | NACO

இளைஞர் திருவிழா 2010

இளவட்டம்

Youth Carnival 2010

எல்லோர்க்கும் அவர்கள் நீதியும், உரிமையும் கிடைக்க உறுதியோடு ஒன்றாய் செயல்படுவோம்.

எச்ஐவியோடு வாழும் பலபேர் தொடர்ந்து புறக்கணிக்கப்படறாங்க. வேலையை விட்டு, வீட்டை விட்டு, ஊரை விட்டு, ஏன் குழந்தைங்களுக்கு கல்விகூட மறுக்கப்படுது. இந்த நிலை மாறணுங்க. யாருக்கு வேண்டுமானாலும் எச்ஐவி வரலாம் என்ற உண்மையை, இந்த இளவட்டம் மற்றவர்களுக்கு எடுத்து சொல்லணும்.

வாழ்வை கொண்டாடுவோம்!!!

HEROES PROJECT | RED RIBBON CLUB | NACO

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2282/2004
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11

'2010' விழிப்புணர்வு நிகழ்ச்சி

நாள் 18.10.2010

முழு சுகாதார இயக்கத்தின் சார்பில் சர்வதேச கைகள் கழுவும் தினம் 2010 அக்டோபர் 15 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடைபிடிக்கப்பட்டது

காஞ்சிபுரத்தில் முழு சுகாதார இயக்கம் சார்பில், சர்வதேச கைகள் கழுவும் தினத்தையொட்டி 2010 என்ற எண் வடிவில் பள்ளிமாணவ மாணவியரை அமர வைத்து, மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன், மாவட்ட ஆட்சியர் திரு. ஆசிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் ஆட்சியர் திரு. அனிஷ் ஷாப்ரா, இ.ஆ.ப., ஆகியோர் கைகளை கழுவும் முறையினை விளக்கினார். இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளின் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மகளிர் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை